**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 117/2022</u>**

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | வயது | 62 |
| த.பெ.(அ)க.பெ. | லட்சுமணன் | தொழில் | விவசாயம் |
| ஊர் | மேற்கத்தியானுர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் மேற்கத்தியானுர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1ம் எதிரி தினேஷ் எனது தங்கை பேரன். 2ம் எதிரி ஆனந்தன் 1ம் எதிரியின மாமனார். 3ம் எதிரி அனுமுத்து 1ம் எதிரியின மாமா. எங்களுக்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்குமிடையே சிவில் பிரச்சனை இருந்துவருகிறது. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு தேதி நினைவில்லை. அன்றைய தினம் பகல் 12.00 மணியளவில் நான் எனது தம்பி மகன் கோபியிடம் இருவருக்கும் பொதுவான நிலத்தை எதற்காக என்னுடைய அனுமதியில்லாமல் நீ விற்றாய் என்று கேட்டேன் மேலும் 10 நபர்களை வைத்து ஊரில் பஞ்சாயத்து பேசினோம். அப்போதே வழக்கின் எதிரிகள் என்னை அடிக்க வந்தார்கள்.

(2) நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மீண்டும் அன்றயை தினம் இரவு சுமார் 7.00 மணிக்கு வழக்கின் எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு அருகே வந்து என்னை வெளியே கூப்பிட்டார்கள். வாடா வெளியே மணி உன்னை அடிக்காமல் விடமாட்டேன் என்று எதிரிகள் கூறினார்கள். அசிங்கமான வார்தைகளால் திட்டினார்கள். அதன்பிறகு என்னை 2ம் எதிரி கோலால் முதுகின் மீது அடித்தார் மற்ற எதிரிகள் கைகளாலும் கால்களாலும் தாக்கினார்கள். தடுக்க வந்த எனது மனைவியை அடித்தார்கள். எனக்கு காலிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது. எனது மகன் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி என்னையும் எனது மனைவியையும் திருப்பத்தூர் அரசு மருததுவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். போலீஸார் மருத்துவமனையில்

வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். தற்போது என் முன் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=**

1ம் எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 117/2022</u>**

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபாின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாத்தியம்மாள் | வயது | 58 |
| த.பெ.(அ)க.பெ. | மணி | தொழில் | விவசாயம் |
| ஊர் | மேற்கத்தியானுர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் மேற்கத்தியானுர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். எனது கணவரின் தம்பி மகன் கோபி எங்களுக்கு பொதுவான பாத்தியப்பட்ட இடத்தை எங்களுக்கு தெரியாமல் விற்றுவிட்டார். எனது கணவர் அ.சா.1 இது சம்மந்தமாக அவரிடம் கேட்டு ஊரில் பஞ்சாயத்து ஏற்பாடு செய்தார். பஞ்சாயத்து நடக்கும்போது 2ம் எதிரி எனது கணவரை உங்களுக்கு நிலம் எங்கு உள்ளது என்று கேட்டு அடிக்க வந்தார். பஞ்சாயத்தார்கள் கலைந்து சென்றுவிட்டார்கள்.

(2) நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அன்றைய தினம் மாலை சுமார் 7.00 மணிக்கு வழக்கின் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து அ.சா.1 எனது கணவரை வீட்டிற்கு வெளியே வாடா என்று அழைத்தார்கள். ஆபசாமாக திட்டினார்கள். 2ம் எதிரி கோலால் என்னையும் எனது கணவரையும் தாக்கினார். எதிரி தினேஷ் கைகளால் தாக்கினார். 3ம்எதிரி அனுமுத்து சம்பவயிடத்தில் இருந்தார். எனது மகன் திருப்பதி ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னையும் எனது கணவரையும் திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். எதிரிகள் எங்களை தாக்கிவிட்டு எங்களுக்கு முன்பாகவே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தனர். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=**

1ம் எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.